# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1577/4 - 2008 නොවැම්බර් 25 වැනි අඟහරුවාදා - 2008.11.25

1577/4 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. : 27.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

பிரிவு 10 (1) (அ) இன் கீழான பணிப்புரை

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10 (1) (அ) இன் கீழ், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, வீட்டுப்பாவனை மற்றும்/அல்லது கைத்தொழில்சார் திரவ பெற்றோலிய எரிவாயு (எல்பிஜி) வின் அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து வர்த்தகர்கள் மற்றும்/அல்லது உள்நாட்டு வியாபாரிகள் ஆகியோர், பாவனையாளர்கள் சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னதாக அவர்கள் கேட்குமிடத்து விற்பனைக்காக வைத்திருக்கும் அனைத்து வகையான எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்களின் நிறையினை, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் அதன் சரியான நிறையிடலுக்காக சான்றுப்படுத்திய நிறையிடல் உபகரணத்தின் மூலம் நிறையிட்டுக் காட்டுவதற்காக அவ் உபகரணத்தை தமது கடையில்/விற்பனை நிலையத்தில் தெளிவாகத் தெரியக்கூடிய பகுதியில் பொருத்தி வைத்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

இப்பணிப்புரையானது 2008, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2008 நவெம்பர் 24.

12- 308


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.